**கவனிக்க.-** 2010.06.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் விலங்கு வைத்திய அலுவலர் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது (வே. அ. சீ. இல. பி. 79879).


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1659 - 2010 ජූනි 18 වැනි සිකුරාදා - 2010.06.18

*1659 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 788 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 790 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வரரராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூன் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூன் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவிற்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்களை உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஆடி மாதம் 19 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆனி 01.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | மகர | மகர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் சியானா கோரளை தெற்கு பிரிவின் விவாகப் (பொது) பதிவாளருக்குமான பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

6-317

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவிற்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்களை உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஆடி மாதம் 19 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆனி 01.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொள்ளுப்பிட்டி பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளருக்குமான பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 12 |
| கொழும்பு | கொழும்பு | கொழும்பு பகுதியில் (சாந்த செபஸ்தியன் பிரிவின்) விவாகப் (பொது) பதிவாளருக்குமான பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 12 |

6-316

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவிற்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்களை உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஆடி மாதம் 19 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, வைகாசி 31.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடுநுவர | உடுநுவர மெதபலாத்த பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் உடுநுவர/யட்டிநுவர பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

6-295

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேர பாடநெறியை தொடர்வதற்காக தேர்ந்தெடுத்தல் – 2011 ஆம் கல்வி ஆண்டு

2011 ஆம் ஆண்டில் நடைபெறும் ஒரு வருடகால பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி (உள்வாரி) முழுநேர பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பாடநெறி கொழும்பு, பேராதனை மற்றும் யாழ் பல்கலைக்கழகங்களில் நடைபெறும்.

3. இப்பாடநெறி சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடைபெறும். இப்பாடநெறிக்காக ஒரு மொழிமூலம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

அவ்வவ் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் மொழி மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :-

கொழும்பு பல்கலைக்கழகம் - சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழிமூலம்
பேராதனைப் பல்கலைக்கழகம் - சிங்கள மொழிமூலம்
யாழ் பல்கலைக்கழகம் - தமிழ்மொழிமூலம்

4. சகல விண்ணப்பதாரர்களும் தாம் கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்:-

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ii) 2010.07.18 ஆந் திகதியன்று 50 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

(iii) சிறந்த தேகாரோக்கியம் மற்றும் நற்பிரஜையாக இருக்க வேண்டும்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

(v) கீழ்க் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் :-

(அ) இலங்கை ஆசிரியர் சேவை,
இலங்கை தனியார் பாடசாலை ஆசிரியர் சேவை,
இலங்கை பிரிவென் ஆசிரியர் சேவை ;

(ஆ) இலங்கை அதிபர் சேவை ;

(இ) இலங்கை கல்வி நிர்வாக சேவை ;

(ஈ) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை.

(vi) பட்டத்திற்குப் பின்னர் 2010.07.18 ஆந் திகதியன்று இலக்கம் 04 (v) குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் ஒரு வருடகால சேவைக்காலத்தை பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

**கவனிக்க வேண்டியது :**

(1) கற்கை விடுமுறை பெற்று பிணைமுறிக்கு உட்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் 2010.07.18 ஆந் தினத்திற்கு பிணை முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய சேவைக்காலத்தை பூர்த்திசெய்து அல்லது அவ்வாறின்றேல் 05 வருடங்கள் (05) பூர்த்திசெய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பிக்க தகைமை பெறுவர் ;

(2) கல்வியியலாளர் பட்டதாரிகள் இப்பாடநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பிக்க முடியாது ;

(3) பாடநெறியைத் தொடர்வதற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் 2005 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னர் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் "புதிய பட்டதாரிகளை திசைமுகப்படுத்தும் மூன்று மாதகால பாடநெறி" யைத் தொடர்ந்து பூர்த்திசெய்திருக்க வேண்டும் ;

5. (1) **தேர்ந்தெடுக்கும் ஒழுங்குமுறை :**

(i) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படும்.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் 4 (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரி உள்ளடங்கும் சேவைகளுக்கான பதவியின் சேவைக்காலத்திற்காக நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும். சேவைக்காலத்தின் ஒரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். சேவைக்காலத்திற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சப் புள்ளிகளின் எண்ணிக்கை 40 ஆகும். விண்ணப்பதாரியின் சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது அவர் உரிய பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற தினம் தொடக்கம் ஆகும்.

(iv) எழுத்துமூலப்பரீட்சையின் புள்ளிகள் மற்றும் சேவைக்காலத்திற்காகக் கிடைக்கும் புள்ளிகள் ஆகியவற்றின் மொத்தம் இறுதிப் புள்ளிகளாகக் கருதி அப்புள்ளிகளின் தொடருக்கமைய பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்படும்.

(v) உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கையில் 1% இவர்களுக்காக ஒதுக்கப்படும்.

(vi) பாடநெறியைத் தொடர்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கை அவ்வவ் பல்கலைக்கழகத்தில் காணப்படும் இடவசதிகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

(2) **எழுத்துமூலப்பரீட்சை :**

(i) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் கொழும்பு மற்றும் யாழ் நகரங்களில் நடைபெறும் ;

(ii) மேற்கூறப்பட்ட 2 மத்திய நிலையங்களில் தாம் விரும்பும் மத்திய நிலையத்தில் விருப்பமான மொழி மூலம் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் பின்னர் மாற்றியமைக்கப்படமாட்டாது ;

(iii) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்டு பரீட்சார்த்தி செயற்பட வேண்டும் ;

(iv) எழுத்துமூல பரீட்சை வினாப்பத்திரம் இரண்டு பிரிவுகளாக அமையும்.-

(அ) பொது அறிவு.- சமகாலத் தகவல்கள், பொது அறிவு, கல்வித் தகவல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான வினாப்பத்திரம் (01 மணித்தியாலம்).

(ஆ) பொது உளச்சார்வு.- மொழி அறிவு, விளக்கம், விவாதிக்கும் திறமை, புள்ளிவிவர ரீதியிலான திறமை போன்றவைகளை உள்ளடக்கியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். (நேரம்.- 1 1/2 மணித்தியாலம்).

(3) **நேர்முகப்பரீட்சை :**

(i) நேர்முகப் பரீட்சையின்போது பரீட்சார்த்தியினால் வர்த்தமான அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய தாம் பாடநெறியைத் தொடர தகைமை பெற்றவர் என உறுதி செய்ய வேண்டும் ;

(ii) பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4 (V) இற்குரிய பதவியின் சேவைக்காலத்தை உறுதிசெய்வதற்கு உரிய ஆவணங்களை நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். விசேடமாக பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற தினம் நேர்முகப்பரீட்சையின்போது உறுதிசெய்யப்பட வேண்டும். இது பரீட்சார்த்திக்கு சேவைக்காலத்திற்குரிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவியாக அமையும்.

(iii) பிரிவெனா அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலிருந்து பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள்-

(அ) பாடநெறிக்காக விடுவிப்பதாகவும் ;
(ஆ) பாடநெறியை தொடரும் காலத்திற்குள் சம்பளம் செலுத்துவதற்காகவும் ;
(இ) பாடநெறியின் இறுதியில் ஆசிரியரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதாகவும் ;
(ஈ) குறித்த ஆசிரியரின் பாடநெறி கால எல்லைக்குள் அவரது வெற்றிடத்திற்கு வேறு ஆசிரியர் ஒருவரை ஆட்சேர்ப்பதில்லை என்றும் ;
(உ) ஆசிரியரின் பணிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியருக்கிடையே பகிர்ந்தளிப்பதாகவும்

பதிவாளர்/நிர்வாக சேவை முகாமையாளர்களினால் உறுதிசெய்த அறிக்கைப்படிவத்தை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

6. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படவேண்டிய முறை**.- (i) இவ்வழங்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய ஏ4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும் ;

(ii) கட்புலன்/செவிப்புலனற்ற, ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்களுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் இடதுபக்க மேல்மூலையில் சிவப்பு நிறத்தினால் "கட்புலனற்ற/செவிப்புலனற்ற/ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்கள்" எனக் குறிப்பிடல் வேண்டும் ;

(iii) பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்.- பரீட்சைக் கட்டணமாக ரூபா 300 தொகையை அருகாமையில் உள்ள தபால் அலுவலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக உள்ள கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும். 2010.06.18 ஆந் திகதி தொடக்கம் 2010.07.18 ஆந் திகதிவரை சகல தபால் அலுவலகங்களிலும் இப்பற்றுச்சீட்டை வழங்குவதற்காக ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களத்தினால் தபால் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :

(அ) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) பாடநெறி எனக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) 2010.07.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(v) நேரசூசி மற்றும் அனுமதி அட்டை பரீட்சார்த்திகளுக்கு தபால்மூலம் அனுப்பப்படுவதுடன் தமது அனுமதி அட்டை பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னர் கிடைக்காத பட்சத்தில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு அது தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகவல்களுடன் அறிவிக்க வேண்டும்:-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) பணம் செலுத்திய தபால் அலுவலகம் மற்றும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இலக்கம் ;
(உ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட திகதி ;
(ஊ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட அலுவலகம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம் ;

(vi) எக்காரணம் கொண்டும் பரீட்சைக்கட்டணம் மீண்டும் திருப்பிச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றியமைக்கப்படவோ மாட்டாது.

(vii) முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் ;

(viii) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப்பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை செல்லுபடியாகும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் ;

(ix) உரிய பாடநெறியைத் தொடருவதற்காக விண்ணப்பதாரர்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது ;

(x) தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரும் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்யவில்லை என தெரியவரும் பட்சத்தில் அவ்வாறான பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுப்பதிலிருந்து இரத்துச்செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

7. **கற்கை விடுமுறை**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாடநெறியைத் தொடர்வதற்காக முழுமையான சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இதற்காக இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள், தேசிய பாடசாலை, தனியார் பாடசாலை, பிரிவெனாக்களில் சேவையாற்றும் பணியாளர்களின் கற்கை விடுமுறையினை கல்வி அமைச்சின் செயலாளரினாலும் ஏனைய விண்ணப்பதாரர்களின் கற்கை விடுமுறை மாகாணக் கல்விச் செயலாளர்களினால் அங்கீகரிக்க வேண்டும்.

8. **பிணை முறி**.- பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதார்கள் பாடநெறியைத் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் குறைந்த பட்சம் 3 1/2 வருடகாலம் அவர் திணைக்களத்தில் சேவையாற்றுவதற்காக மாகாண கல்விப் பணிப்பாளர்/கல்விச் செயலாளருடன் பிணை முறியில் ஒப்பமிட வேண்டும். பயிற்சிக்காக செலவாகும் நிதி, 10,000 ரூபாவை தாண்டும் பட்சத்தில் பிணை முறிக்கமைய கட்டாய சேவைக்காலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யாது உரிய காலஎல்லைக்குள் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அக்கற்கை விடுமுறைக்காலத்திற்குள் அவருக்கு செலுத்தப்பட்ட முழுமையான சம்பளம் மற்றும் கொடுப்பனவு மீண்டும் திருப்பிச் செலுத்த வேண்டும்.

10. பாடநெறியைத் தொடரும் காலத்தில் மாணவர்களின் செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், வரவு திருப்தியளிக்காத பட்சத்தில் அவர்கள் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கிலமொழிகளில் ஏதேனும் வித்தியாசங்கள் இருப்பின் சிங்கள மொழி வசனங்களே செல்லுபடியாகும்.

சுனில் எஸ். சிரிசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பெலவத்தை,
பத்திரமுல்லை,
2010, மே 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேர பாடநெறியை தொடர்வதற்காக தேர்ந்தெடுத்தல் - 2011 ஆம் கல்வி ஆண்டு

(அலுவலகப் பயன்பாட்டிற்கு)

| விண்ணப்பிக்கும்மொழி மூலம் (சிங்களம்/தமிழ்) | விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் (கொழும்பு/யாழ்ப்பாணம்) |
|---|---|
| | |

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) (முதல் எழுத்துக்கள் பின்னால் வருமாறு) : திரு./திருமதி/செல்வி:-----.
(உ-ம் : Mr. SILVA, A. B. C.) :----.
(ii) முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2. (i) அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

(ii) சொந்த முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

(iii) சேவையாற்றும் பாடசாலை/நிறுவகத்தின் அமைவிடம் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

| மாகாணம் | மாவட்டம் | வலயம் |
|---|---|---|
| | | |

(iv) நிறுவனத்தின் தன்மை (அரச பாடசாலை/தனியார் பாடசாலை/பிரிவெனா/ஏனையவை) :----.

3. (i) பிறந்த திகதி :

ஆண்டு :-----. மாதம் :----. திகதி :----.

(ii) 2010.07.18 ஆந் திகதி வயது :-

வருடங்கள் :-----. மாதங்கள் :----. நாட்கள்:----.

4. பட்டம் தொடர்பான விவரம்:-

| பட்டம் | பல்கலைக் கழக பாடநெறியைத் தொடரும் காலம் ...... தொடக்கம் ......) | பட்டம் பெற்ற ஆண்டு | பட்டம் செல்லுபடியாகும் தினம் | பட்டத்திற்கான பாடங்கள் | சித்தியின் தரம் | நிறுவகம்/ பல்கலைக் கழகம் | பட்டம் (உள்வாரி/ வெளிவாரி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

5. (i) முதலாவது நியமனத்தின் பதவி.................... முதலாவது நியமனத் திகதி :----.

(ii) வர்த்தமானி அறிவித்தலின் 4 (v) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமனம் பெற்ற திகதி:----.

(iii) அப்பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற திகதி :----.

(iv) தற்போதைய பதவி :----.

(v) பட்டத்திற்குப் பின்னர் ஆசிரியர் சேவையின்/அதிபர் சேவையின் கல்வி நிர்வாக சேவையின்/ஆசிரிய கல்விச் சேவையின் பதவிக்கு 2010.07.18 ஆந் திகதியன்று சேவைக்காலம் :----.

6. (i) தொழிற்பயிற்சி தொடர்பான விவரம்:----.

| பாடநெறியைத் தொடரும் நிறுவகம் (ஆசிரிய கலாசாலை/தேசிய கல்விக் கல்லூரி/ஏனையவை) | பாடநெறி (பாடத்துறை) | நிறுவனத்தில் பாடநெறியைத் தொடர்ந்த கால எல்லை | |
|---|---|---|---|
| | | திகதி தொடக்கம் | திகதி வரை |
| | | | |

(ii) தாங்கள் புதிய பட்டதாரி ஆசிரியர்களை திசைமுகப்படுத்தும் பாடநெறியைத் தொடர்ந்துள்ளீரா?
(இது 2005 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஆகும்)

7. பெற்றுக்கொண்ட கற்கை விடுமுறை தொடர்பான விவரங்கள் :

| விடுமுறை பெற்றதற்கான காரணம் | முறிக்காலம் ............. திகதி தொடக்கம் ............. திகதி வரை | முறியை பூரணப்படுத்த எஞ்சியுள்ள காலம் |
|---|---|---|
| | | |

குறிப்பு.- தேசிய கல்விக் கல்லூரி ஒன்றில் தேசிய போதனாவியல் டிப்ளோமாப் பாடநெறியைத் தொடரும் காலஎல்லை கற்கை விடுமுறையாகக் கருதப்படமாட்டாது.

8. விண்ணப்பதாரருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் உள்ளனவா? அவ்வாறிருப்பின் அது தொடர்பான தகவல்கள்
(ஆம்/இல்லை : ....................)
ஆம் எனின் எதற்காக)......................

9.

| | |
|---|---|
| தபால் அலுவலகத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். | .................. ஆந் திகதிய பற்றுச்சீட்டு இலக்கம்............. இன் கீழ் ................ தபால்/உபதபால் அலுவலகத்திற்கு ரூபா................ (எழுத்தில்) செலுத்தப்பட்டதனை உறுதி செய்கிறேன். |

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதும் உண்மையானதும் என்றும் 2010.06.18 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய எனக்கு இப்பாடநெறியைத் தொடர்வதற்காக தகைமை உள்ளது என்றும் பரீட்சை சட்டக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி செல்லுபடியாகும் பற்றுச்சீட்டை இணைத்துள்ளதாகவும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

*11.* **பாடநெறிக்காக நிறுவனத்திலிருந்து விடுவிப்பதற்கான பரிந்துரை** *(அதிபர், பீடாதிபதி, பதிவாளர், நிர்வாக சபை முகாமையாளர் அல்லது திணைக்களப்பொறுப்பாளர்) :*

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரரின் பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தொழிற்பயிற்சிப் பாடநெறியை தொடரும் தேவையை கருத்திற்கொண்டு இவ்விண்ணப்பதாரரை விடுவிக்கின்றேன்./ விடுவிக்கவில்லை.

----,
அதிபர்/நிறுவனத் தலைவரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

*12.* பாடநெறிக்கு ஆசிரியரை விடுவிப்பது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சு :

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியைத் தொடர்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அதன் பொருட்டு கல்வி விடுமுறை வழங்குவதற்கு சிபார்சு செய்கின்றேன்.

----,
வலயக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

*6-304*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.